09.08.2024.
CC.No. 62/2023
ம.சா.1 ராக்கம்மாள்
<u>குறுக்குவிசாரணை</u>

1) எனக்கு எதிரியை எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் 2014 ம் ஆண்டு முதல் தெரியும். எதிரியை எப்படி தெரியும் என்றால் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எந்த முகவரியில் இருவரும் பக்கத்து வீட்டில் இருந்தோம் என்றால் எழில் நகரில் இருந்தோம். தற்போது எனது முகவரி கண்டனூர் 6 வது வீதி, திலகர் திடல் ஆகும் எனது தற்போதைய முகவரியில் எந்த ஆண்டு முதல் வசித்து வருகிறேன் என்றால் 2018 ம் ஆண்டு முதல் வசித்து வருகிறேன். எனக்கு ராதா என்ற மற்றொரு பெயர் உண்டு என்றால் சரிதான். 27.03.2021 ல் எதிரி மீது சாக்கோட்டை காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன் என்றால் புகார் கொடுத்தேன் தேதி நினைவில்லை. 2021 ம் வருடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகாருக்கு காவல் நிலையத்தில் இருந்து கொடுத்த சி.எஸ் ஆர். நகல் என்றால் எனக்கு மனு ரசீது கொடுக்கவில்லை. நான் புகார் கொடுத்தபோது லண்டன் சிட்டி, கண்டனூர் என்ற முகவரியில் நான் வசிப்பதாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2) நான் எதிரிக்கு ஒரு முறை தான் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் 11.04.2020 ல் கடன் கொடுத்தேன். நான் 2014 முதல் 2022 வரை ரேசன் கடையில் எடையாளராக வேலை செய்து வந்தேன். அப்போது எனக்கு மாதம் ரூ. 8 ஆயிரம் சம்பளம். என் கணவரை பிரிந்த வாழ்கிறேன் என்றால் இல்லை. என் கணவர் லண்டனில் வசித்து வருகிறார். நான் எதிரிக்கு ரூ. 6 லட்சம்

கடன் தொகை கொடுத்தேன். நான் கடன் கொடுத்த தேதியில் என்னிடம் ரூ. 6 லட்சம் இருந்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் நான் எழில் நகரில் வசித்து வரவில்லை என்றால் சரிதான். கண்டனூரில் வசித்து வந்தேன். 11.04.2018 வருடம்தான் எதிரி என்னிடம் கடன் பெற்றார் என்றால் சரியல்ல. எதிரி திலகர் தெருவில் உள்ள என் வீட்டில் வைத்துதான் பணம் வாங்கி சென்றார்.

3) நான் பொய்யாக 2020ம் ஆண்டு திலகர் தெருவில் உள்ள வீட்டில் வைத்து கடன் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 2021ம் வருடம் கன்டனூர் லண்டன் சிட்டி நகரில் வசிப்பதாக எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டு 2020ல் வசிக்காத முகவரியில் இருந்து கடன் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மேற்படி கடனை 2018 வருடம் எழில் நகரில் உள்ள எனது முகவரியில் வைத்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் 2018ல் கடன் கொடுத்ததால் கடன் காலாவதி ஆகிவிட்டது என்றும், அதனை மறைப்பதற்காக 2020ல் கடன் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் தொழில் செய்வதற்காக கடன் கேட்டார். எதிரி பைனான்ஸ் தொழில் செய்கிறார்.

4) 2020 மார்ச் 25 முதல் இந்தியா முழுவதும் பொது முடக்கம் அறிவிக்ககப்பட்டிருந்த காலத்தில் எதிரி எந்த தொழிலும் செய்திருக்க முடியாது என்றாலும், தொழிலுக்காக மேற்படி காலக்கட்டத்தில் எதிரி கடன் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2020ல்

காவல் நிலையத்தில் புகாரில் நான் ரூ. 8 லட்சம் கொடுக்கவேண்டும் என்று நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் நான் கைப்பட புகார் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி விசாரணையில் ரூ. 4 லட்சத்து 95 ஆயிரம் எதிரி என்னிடம் பணம் கொடுத்துள்ளார் என்றும், மீதத்தொகையை 3 மாத காலத்தவணையில் பெற்றுக்கொள்வதாக நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின்னர் எதிரியை நான் தொந்தரவு செய்ததால் எதிரி என் மீது பள்ளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் மேற்படி பள்ளத்தூர் காவல் நிலையத்தில் நான் எழுதிக்கொடுத்த வாக்குமூலம் என்றால் சரியல்ல. அதை நான் எழுதிக்கொடுக்கவில்லை.

5) மேற்படி வாக்குமூலம் நான் எழுதிக்கொடுத்தேன் என்றாலும், வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாக்குமூலத்தில் நான் எதிரியின் 2 காசோலைகள் மற்றும் கடனுறுதிசீட்டை வைத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து கொள்கிறேன் என்று எழுதிக்கொடுத்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆய்வளர் அவ்வாறு கூறினார் ஆனால் நான் எழுதிக்கொடுக்கவில்லை. அச்சமயத்தில் எதிரியின் 2 காசோலைகளும், கடனுறுதிசீட்டும் என்னிடம் இருந்தது என்றால் சரிதான். நான் புகார்மனுவில் 10.01.2023 ல்தான் எதிரி காசோலை கொடுத்தார் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. என்னை 06.01.2023 ல் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றாலும், அதன் பின்னர் 10.01.2023 ல் இவ்வழக்கு காசோலையை எதிரி கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**6) இவ்வழக்கு காசோலையை நான் எப்போது வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால், 10.01.2023 ல் தாக்கல் செய்தேன். இவ்வழக்கு காசோலை மதிப்பு மறுப்பு மறுக்கப்பட்டு 07.02.2023 அன்று வந்தது. ம.சா.ஆ. 3 ஆவணத்தில் 12.01.2023 அன்று வழக்கு காசோலை மதிப்பு மறுக்கப்பட்டதாக தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 10.02.2023 அன்று அனுப்பினேன். மேற்படி தேதியில் அறிவிப்பு அனுப்பியதற்கு அஞ்சலக ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.02.2023 அன்று நான் எனது வழக்கறிஞரை சந்தித்தேன். எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. எதிரி அறிவிப்பை பெற்ற கொண்ட தேதி 13.03.2023 என்று ம.சா.ஆ. 5 ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரியாக தெரியவில்லை.**

**7) வழக்கறிஞர் அறிவிப்பு காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட 30 நாட்களுக்கு அளிக்காமல் காலத்தாமதம் ஏற்பட்டதால் காசோலை ரிட்டன் மெமோ 07.02.2023 ல் கிடைத்ததாகவும், 10.02.2023 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதுபோல் பொய்யாகவும் அதை மறைப்பதற்காக அஞ்சலக ரசீதை தாக்கல் செய்யாமலும், வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.